## கீழடி ஆய்வு:

# பா.ஜ.க. ஒன்றிய அரசு திருத்தம் கோருவதன் நோக்கம் என்ன?



கடந்த வாரம் - அதாவது மே 23 ஆம் தேதி வாக்கில் நாளேடுகளில் கீழடி ஆய்வைக் குறித்து ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் செய்தி ஒன்றைப் படிக்க நேர்ந்தது. நாம் பெரிதும் அதிர்ச்சிக்கு ஆளானோம். இந்தச் செய்தியைப் படித்த தமிழர்கள் எல்லோருக்கும் சித்த கலக்கம் ஏற்பட்டு இருக்கும். அப்படிக் கீழடி ஆய்வுச் செய்தியில் என்ன செய்தியை இந்திய அரசின் தொல்லியல் துறை வெளியிட்டு இருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்கிற போதுதான் அதிர்ச்சியும் சித்த கலக்கமும் ஏற்பட்டு இருக்கும் என்று சொல்ல வருகின்றோம். ஆய்வையே அப்படி அதிர்ச்சியுறச் செய்து இருக்கிறார்கள்.

கீழடியில் - வைகையாற்றங்கரையில் 2014-15, 2015-16, 2016-17 ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அரசின் தொல்லியல் துறையின் அகழாய்வுப் பிரிவு - அதாவது பெங்களூரு பிரிவினர் அகழாய்வை மேற்கொண்டனர். நான்காம் கட்ட ஆய்வினைத் (2017-18) தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேற்கொண்டது. இதற்குப் பிறகு ஐந்தாம் கட்ட ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

நான்காம் கட்ட அகழாய்வில் 5820 தொல்பொருட்கள் கண்டறியப்பட்டன. இப் பொருள்களின் வாயிலாகப் பண்டைய காலத்தில் தமிழர் நாகரிகம் வளர்ச்சி அடைந்த நிலையில் இருந்ததை அறிய முடிகிறது. ‘கி.மு. 600 காலத்திய கீழடி வெளிப்படுத்தியுள்ள தொல்பொருள்களின் செய்நேர்த்தி, தொழில் நுட்பத் திறன், பொறியியலறிவு, நுண்கலையுணர்வு, ஆகியன திடீரென தோன்றிவிட இயலாது’ என்கிறார் ஆய்வறிஞர் பி.ஜெ.செரியன். ஆக, இன்னும் பழங்காலத்திற்கு நம்மை கீழடி வரலாறு இட்டுச் செல்கிறது. இதன் தொடர்ச்சி சிந்து சமவெளி நாகரிகத்திற்குத் தொடர்புடையதாகத் தெரியவருகிறது.

கீழடி ஆய்வில் மதம் சார்ந்த குறியீடுகள் எவையும் கிடைக்கவில்லை என்பது ஒரு சிறப்புரிக்குரிய புள்ளியாகும். பி.ஜெ.செரியன் ஒரு கருத்தைச் சொல்கிறார். ‘கீழடி ஆய்வைப் பொருத்தி பார்ப்பதில் நவீன மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா, புதுவை, கர்நாடகம், ஆந்திரா, தெலுங்கானா, இணைந்தே பண்டைய தமிழகம் என்ற அணுமுறை வேண்டும்’ என்கிறார். இதன் மூலம் இந்தத் தென்னிந்தியப் பகுதியைக் கீழடி ஆய்வுக்களமாக அவர் நிர்ணயம் செய்கிறார்.

இதுதான் பண்டைய தமிழகப் பண்பாட்டுப் பெருமையினை மீட்டெடுக்கும் நீண்ட அறிவியல் சார்ந்த மைந்த செயல்பாட்டின் படிக்கல் என்கிறார் செரியன். கீழடியின் ஆய்வின் போது இதனையெல்லாம் கடைபிடித்து ஆய்வாளர்கள் அறிக்கையை வடித்தெடுக்கிறார்கள். இன்னொன்றை நாம் கவனம் கொள்ள வேண்டும். தமிழ்நாடு கல்வெட்டுச் சான்றுகள் நிரம்ப உள்ள மாநிலம். அவை தமிழகம் மிகவும் தொன்மையான மண் என்பதைப் பெருமிதத்தோடு உணர்த்தக் கூடியது. இந்தக் கல்வெட்டுகளை பா.ஜ.க. ஒன்றிய அரசு எப்படி ஒழிக்க முடியும்?

தென்னிந்தியாவில் நடைபெற்றுள்ள அகழாய்வில் மூன்று வித முக்கிய கூறுகள் உள்ளன என்கிறார் பாண்டிச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேரா. கா.ராஜன். அவர் அதனைக் கீழ்க்காணும் விதத்தில் சொல்கிறார்.

(1) சிந்து சமவெளி நாகரிகம் மற்றும் கீழடி தொல்பொருள்களுக்கு இடையேயான பண்பாட்டுத் தொடர்பு.

(2) தென்னிந்தியாவில் நகர மயமாதலின் தொடக்கம்.

(3) பிராக்கிருத-பிராமி, தமிழ்-பிராமி எழுத்துகளின் காலம்.

சிந்து சமவெளி நாகரிகம் கி.மு.15 ஆம் நூற்றாண்டு வாக்கில் இறுதி நிலைக்கு வந்தது எனலாம். கீழடிப் பண்பாடானது கி.மு. ஆறாம் நூற்றாண்டு வாக்கில் தொடங்கிற்று என இன்றைய நிலையில் தெரியவருகிறது.

இரண்டாவது நகரமயமாக்குதல் ஆகும். கங்கை சமவெளி தென்னிந்திய சூழலுக்கிடையே எப்போதும் வேறுபாடு உண்டு. இந்த வேறுபாட்டை எப்படி களைய முடியும்? இது இயற்கை ஆயிற்றே!

மூன்றாவது எழுத்து வடிவத்தின் காலம் பற்றியதாகும். தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் வெளிக்கொணரப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்பு பெற்ற பானை ஓடுகள், நூற்றுக்கும் அதிகமான குகை கல்வெட்டுகள், நான்கு நினைவு நடுகற்கள், இவற்றோடு எழுத்துப் பொறிக்கப் பெற்ற ஏராளமான முத்திரைகள், மோதிரங்கள், நாணயங்கள் ஆகியன இந்த எழுத்துமுறை நீண்டகாலம் நிலவி வந்ததைத் தெளிவாக உணர்த்துகின்றன.

ஒன்றிய அரசின் அகழாய்வுத் துறை ஆய்வை மேற்கொண்டு நிறுத்திவிட்டது. ஆனால் தமிழக அரசின் தொல்லியல் துறை அமர்நாத் ராமகிருஷ்ணா அகழ்வாராய்ச்சியின் பொறுப்பாளராக இருந்தார். அவர் 3 ஆண்டுகள் உழைத்து 982 பக்கங்கள் கொண்ட மிக விளக்கமான அறிக்கையைத் தயாரித்தார். இந்த அறிக்கையில் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை எடுத்துச் சொல்லியிருந்தார்.

அமர்நாத் ராமகிருஷ்ணா ஆய்வு முறை அறிவியல் பூர்வமாக இருந்தது. 2017 பிப்ரவரியில் கண்டெடுக்கப்பட்ட கரியின் மூலம் இந்த இடம் கி.மு.200 க்கு முற்பட்டது என்பதை நிருபித்துக் காட்டினார். கீழடியில் உள்ள பொருள்கள் அனைத்தும் சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டவை ஆகும்.

அமர்நாத் ராமகிருஷ்ணாவின் ஆய்வின் தரம் சிறப்புக்குரியதாக இருந்தும் கீழடி அகழாய்வு அறிக்கையை மாற்றி எழுத வேண்டும் என்று ஒன்றிய அரசின் தொல்லியல் துறை வலியுறுத்துகிறது. இதை எப்படி ஏற்பது? இதற்குக் காரணம் என்ன?- என்று நாம் குழப்பிக் கொள்ளத் தேவை இல்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசின் குணம், மணம், நெடி அப்படி. அறிவியலுக்கும் அவர்களுக்கும் பூமிக்கும் ஆகாயத்திற்கும் உள்ள தூரம் என்கிற போது யார்தான் என்ன செய்ய முடியும்?

கீழடியில் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போதே ஒன்றிய அரசு வழங்கி வந்த நிதியை நிறுத்தி விட்டது. ஏன் நிதியை நிறுத்துகிறார்கள். பா.ஜ.க.வினர் சொல்லிவரும் வரலாற்றுக்கு ஏற்ப ஆய்வின் வெளிப்பாடு இல்லை. ஆகவே நிதியை ஒன்றிய அரசு நிறுத்துகிறது.

இப்போது ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏற்கெனவே அமர்நாத் ராமகிருஷ்ணா அனுப்பி வைத்து இருந்த அறிக்கையை அவருக்கே திருப்பி அனுப்பி அதனை மாற்றி எழுத வேண்டும் என்று கூறியிருக்கிறது. இன்னும் சொல்வதானால் ஒரு நாளேட்டில் குறிப்பிட்டபடி ‘நாங்கள் கூறுவது போல அந்த அறிக்கையை திருத்தி எழுதுமாறு உத்தரவிட்டு இருக்கிறது’ என்று கூறப்பட்டு இருக்கிறது. இந்த அணுகுமுறை எதைக் காட்டுகிறது?

தொல்லியல் அறிவியலின்படி கால நிலைக்கு ஏற்ப ஆய்வறிக்கையைத் தயாரித்து அமர்நாத் ராமகிருஷ்ணா அனுப்பி இருக்கிறார். இதனை அவர்கள் கூறுவது போல அறிக்கையைத் தயாரிப்பது எப்படிச் சரியானதாகும். இதனை எப்படி ஏற்றுக் கொள்வது? என்ன பொருளில் பா.ஜ.க. ஒன்றிய அரசு இப்படிக் கேட்கிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன மாதிரி அறிக்கையை தயாரிக்கும் படி கேட்டது என்கிற விவரம் நாளேடுகளில் எதுவும் வெளியாகவில்லை. எனினும் பொருத்த மற்ற காரணங்களைக் கூறி இருக்கிறது. அது வருமாறு:

(1) அறிக்கையை மேலும் உண்மையானதாக மாற்ற வேண்டும்.

(2) மூன்று வெவ்வேறு காலகட்டங்களுக்குப் பெயரீடு தேவை.

(3) வரைபடங்களில் தெளிவு இல்லை.


(4) சில முக்கிய ஆவணங்கள் விடுப்பட்டுள்ளன.

இதற்கு அமர்நாத் ராமகிருஷ்ணா அனுப்பியுள்ள பதிலில், கீழடி அகழாய்வு அறிக்கையில் காலவரிசைப்படி அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. அடுக்குகள் வாரியாக வும் காலவரிசைப்படியும் ஆவணங்கள் இணைப்பில் உள்ளன. கீழடி குறித்த வரைபடம், தட்டுகள், படங்கள் அனைத்தும் உயர்ந்த பட்ச தெளிவுத் திறனுடன் வழங்கப்பட்டுள்ளன. இதனால் திருத்தம் தேவையில்லை எனக் கூறியிருக்கிறார்.

இது குறித்து ஒய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியும் சிறந்த ஆய்வாளருமான ஆர்.பாலகிருஷ்ணன் நாட்டு மக்களுக்குப் பல செய்திகளை முன் வைத்து இருக்கிறார். கீழடியில் போதுமான அளவில் அகழ்வாராய்ச்சி செய்யாதது சோகம். அறிக்கைகளை வெளியிடாதது


**க.திருநாவுக்கரசு**

திராவிட இயக்க ஆய்வாளர்




இன்னும் பெரிய சோகம். இது பரிதாபகரமானது. இந்தியா போன்ற பல் கலாச்சார நாட்டில் வரலாறு மிக கவனமாகவும் பொறுப்புடனும் கையாளப்பட வேண்டும். ஆனால் இங்கே அப்பட்டமான சார்பு நிலை தெரிகிறது” என்று ஆர்.பாலகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

ஆர்.பாலகிருஷ்ணன். இந்தச் சூழ்நிலையில் சில முக்கியமான அகழாய்வு நிகழ்வுகளையும் நமக்கு நினைவூட்டுகிறார். அதாவது ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி அலெக்சாண்டர் ரியாவுக்குப் பிறகு 100 ஆண்டுகளாக யாரும் ஆராய்ச்சியை இங்கே தொடங்கவில்லை என்று கூறுகிறார். ஆதிச்ச நல்லூர் குறித்த டி.சத்தியமூர்த்தியின் அறிக்கை நீதிமன்றத்தின் தலையீடுகளால் 15 ஆண்டுகளாக வெளியிடப்படவில்லை, இப்போது அதே பிரச்சினை கீழடியில் நடக்கிறது என்கிறார் பாலகிருஷ்ணன். இதற்குத் தகுந்த காரணம் ஒன்று இருக்க வேண்டும் அல்லவா? -என்பது ஒன்று.

மேலும் ஆர்.பாலகிருஷ்ணன் சொல்கிறார்:

அமர்நாத் ராமகிருஷ்ணா தனது அறிக்கையை 2023 ஜனவரி 30இல் இந்தியத் தொல்லியல் துறை இயக்குநர் ஜெனரலுக்கு அனுப்பினார். ஆனால் அதற்கு முன்னர் 2017 இல் அவர் அசாம் மாநிலத்திற்கு மாற்றப்பட்டார். தற்போது அவர் பழங்காலப் பொருள்கள் துறையின் இயக்குநராக பணியாற்றுகிறார். அறிக்கை சமர்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து திடீரென ஒன்றிய தொல்லியல் துறை திருத்தம் கேட்கிறது.

மேலே நாம் எடுத்துக் கூறியுள்ள பொருத்தமற்ற காரணங்களையே ஆர்.பாலகிருஷ்ணனும் எடுத்துக் கூறிவிட்டு அவர் சில கருத்துரைகளை வழங்கி இருக்கிறார். அவர் சொல்வதாவது:-

இந்தியத் தொல்லியல் துறையின் இந்த நடவடிக்கை தமிழகத்தின் பண்டைய வரலாற்றை நிறுவுவதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும். கீழடி அகழ்வாராய்ச்சி மூலம் கிடைத்த ஆதாரங்கள் தமிழர்களின் நாகரிகம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே மிக உயர்ந்த நிலையில் இருந்ததை நிருபிக்கின்றன. இந்த அறிக்கையில் தாமதம் ஏற்பட்டால், தமிழர்களின் பண்டைய வரலாற்றை உலகுக்கு நிறுவுவதில் பிரச்சினை ஏற்படலாம்.

கீழடி அகழ்வாராய்ச்சி தமிழர்களின் பெருமைக்குரிய வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது. அவ்வாறிருக்க இந்த அறிக்கையை மாற்றி எழுதும் படி கேட்கும் தொல்லியல் துறையின் நடவடிக்கை வரலாற்று ஆய்வாளர்களிடையே கேள்வியை எழுப்பியுள்ளது.”

ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களின் கருத்தைப் பார்த்தோம். அமர்நாத் ராமகிருஷ்ணா திருத்தம் போடத் தேவையில்லை என்று தனது கருத்தைத் தெரிவித்துவிட்டார். இதற்கு மேல் ஒன்றிய அரசு இதில் என்ன செய்ய இருக்கிறது? ஆனால் பா.ஜ.க. ஒன்றிய அரசுக்கு என்று ஒரு நோக்கம் இருக்கிறது. அதை நிறைவேற்றிக் கொள்ளும்விதமாக அவர்களின் அடிப்படையை-அது உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை யெனினும் அதனை தகவமைத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

அகழாய்வுத்துறை அறிவியல் பூர்வமாக இயங்கி வருகிறது. இந்தியத் தொல்லியல் துறைக்கு ஒரு பழைமை உண்டு. இதன் தந்தை எனப் போற்றப்படுபவர் அலெக்சாண்டர் கன்னிங்காம். இவரையொட்டியோ அல்லது தொடர்ந்தோ இராபர்ட் புரூஸ்புட், லார்டுகர்சன், சர்.ஜான்மார்ஷல், சர்.மார்டிமர் வீலர், ரேமன்ட் ஆல்சின், என்.டி.கிருஷ்ணசாமி, ஏ.கோஷ், எம்.என்.தேஷ் பாண்டே, பி.கே.தாபர், எஸ்.ஆர். ராவ், பி.பி.லால், எச்.டி. சாங்கரியா, வி.என்.மிஸ்ரா, ஆர்.எஸ்.பிஷ்ட் என இப்படி இந்திய ஆய்வாளர்கள் தனித்தன்மையுடன் இயங்கி இந்தியத் தொல்லியல் துறையை மேன்மையடையச் செய்து இருக்கிறார்கள்.

ஆனால் இன்றைய பா.ஜ.க.வின் ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தான் கருதியது போல கீழடி ஆய்வு இருக்க வேண்டும் என்ற கருத்தில் ஆய்வறிக்கையில் திருத்தம் கோருவது, நாணயமாகாது; அறமாகாது. இருப்பினும் அவர்களின், ‘தருமம்’ நிலைக்கச் செய்யும் வழிமுறையாகத் திருத்தம் கேட்கிறார்கள் போலும்.

மேலும் நாம் இதைப்பற்றி – ஒன்றிய அரசின் திருத்தம் கோருவது பற்றி இரண்டு வித கருத்துகளை முன் வைக்க விரும்புகின்றோம்.

**(1) ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. சங்பரிவாரங்களின் இலட்சியம் என்பது வேதகால இந்திய சமூகத்திற்கு முன்பு வேறு எந்தவித நாகரிகமும் இங்கே இருந்ததில்லை. அப்படி இருக்கும் போது சிந்து சமவெளி நாகரிகம் கி.மு.15 நூற்றாண்டு வாக்கில் இறுதி நிலைக்கு வந்தது என்பதையும் அதன் தாக்கம் கீழடியில் கி.மு.600 இல் ஊடுருவி இருந்தது என்பதையும் இந்த ஒன்றிய அரசு எப்படி ஏற்கும்?**

**(2) தென்னிந்தியர்களின் - தமிழர்களின் பழைமையை, பெருமையை, நாகரிகத்தை வேதகாலத்திற்கு முந்தியது என்று என்னதான் அறிவியல் பூர்வமாக ஆய்வு கூறினாலும் பா.ஜ.க. ஒன்றிய அரசினர் - இந்தக் கருத்துள்ளவர்கள் ஏற்கமாட்டார்கள். அப்படி ஒரு நாகரிகம் இல்லை. இது அய்ரோப்பியர்களின் பிரித்தாலும் சூழ்ச்சி என்று சொல்லிவிடுவார்கள்.**

மேலே நாம் சொன்ன இந்த இரண்டு முக்கிய காரணங்களுக்காகத்தான் பா.ஜ.க. அரசு திருத்தம் கோருகிறது. ஆனால் அமர்நாத் ராமகிருஷ்ணா திருத்தம் அவசியமில்லை என்று கூறி விட்டார். இப்போது ஆய்வினை வெளியிடாமல் கிடப்பில் போட்டுவிடுவார்கள். புதைப்பொருள் ஆராய்ச்சி பழங்கதை ஆகிவிடும். காலம் எவ்வளவோ மாற்றங்களைக் கண்டு இருக்கிறது. பொருத்திருந்து பார்ப்போம்.



ஈரோடு மாவட்டம் திண்டல் வேளாளர் மகளிர் கல்லூரியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள் சார்பில் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு கட்டுமான பணியிடத்து விபத்து, மறைவு நிவாரண நிதியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் வாரிய தலைவர், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் பொன்குமார், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ/ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், செயலாளர் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியம் சென்னை க.ஜெயபாலன், செயலாளர் தொழிலாளர் இணை ஆணையர் பா.மாதவன், துணை மேயர் வி.செல்வராஜ், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்) முனைவர் த.முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கரூர் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அகில இந்திய கூடைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற ஆண், பெண் அணிகளுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்.